| | | |
|---|---|---|
| **K.J.கீழ முஸ்லிம் மேல்நிலைப்பள்ளி, பரமக்குடி-- இராமநாதபுரம் மாவட்டம்** | | |
| **பன்னிரண்டாம் வகுப்பு -- பொருளியல்** | | |
| **இயல் -- ( 7 ) -- பன்னாட்டுப் பொருளியல்** | | |
| **சரியான விடையைத் தெரிவு செய்க** | | |
| **1)** | இரண்டு நாடுகளுக்கிடையிலான வாணிகம் என்பது<br>அ) வெளி வாணிகம் ஆ) உள் வாணிகம்<br>இ) மண்டலங்களுக்கிடையேயான வாணிகம்<br>ஈ) உள்நாட்டு வாணிகம் | **அ) வெளி வாணிகம்** |
| **2)** | கீழ்க்காண்பவற்றுள்வாணிகத்தைத் தீர்மானிக்கும் காரணி எது?<br>அ) ஒருபண்டத்தின் மேம்பாட்டுக் காலக்கட்டம்<br>ஆ) உற்பத்திக்காரணிகளின் ஒப்பீட்டு விலை<br>இ) அரசாங்கம் ஈ) மேற்கண்ட அனைத்தும் | **ஈ) மேற்கண்ட அனைத்தும்** |
| **3)** | பன்னாட்டு வாணிகம் உள்நாட்டு வாணிகத்திலிருந்து வேறுபடக் காரணம்<br>அ) வணிகக் கட்டுப்பாடுகள்<br>ஆ) உற்பத்திக் காரணிகள் இடம்பெயர இயலாமை<br>இ) நாடுகளின் கொள்கை வேறுபாடுகள்<br>ஈ) மேற்சொன்ன அனைத்தும் | **ஈ) மேற்சொன்ன அனைத்தும்** |
| **4)** | நாடுகள் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட அடிப்படைக் காரணம்<br>அ) ஒருநாடு ஒருகுறிப்பிட்ட பண்டத்தையும் வேறுநாடு மற்றொரு பண்டத்தையும் உற்பத்தி செய்ய விரும்புகிறது<br>ஆ) உற்பத்திவளங்கள் நாடுகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளன<br>இ) பன்னாட்டு வாணிகம் இலாபக் குவிப்பு வாய்ப்பை அதிகப்படுத்துகிறது<br>ஈ) நாடுகளில் நிலவும் வட்டிவீதமும் வெவ்வேறு அளவில் உள்ளது | **ஆ) உற்பத்தி வளங்கள் நாடுகளுக் கிடையே ஏற்றத்தாழ்வுடன் பகிரப்பட்டுள்ளன** |
| **5)** | புதிய பன்னாட்டு வாணிகக்கோட்பாடு எதன் அடிப்படையில் அமைந்தது?<br>அ) முழுமைச்செலவு ஆ) ஒப்புமைச்செலவு<br>இ) உற்பத்திக் காரணிக் கோட்பாடு ஈ) எதுவுமில்லை | **இ) உற்பத்திக் காரணிக் கோட்பாடு** |
| **6)** | பணமாற்றுவீதம் நிர்ணயமாகும் சந்தை<br>அ) பணச்சந்தை ஆ) அயல்நாட்டுச் செலாவணி<br>இ) பங்குச்சந்தை ஈ) மூலதனச்சந்தை | **ஆ) அயல்நாட்டுச் செலாவணி** |
| **7)** | கீழ்க்காணும் எந்தப் பரிமாற்றுவீத முறையில் அங்காடிச் சக்திகளான தேவையும் அளிப்பும் பரிமாற்றுவீதத்தை நிர்ணயிக்கின்றன.<br>அ) மாறாப் பணமாற்றுவீதம்<br>ஆ) மாறுகின்ற பணமாற்றுவீதம்<br>இ) நிலைத்த பணமாற்றுவீதம்<br>ஈ) அரசு ஒழுங்கமைப்புமுறை | **ஆ) மாறுகின்ற பணமாற்று வீதம்** |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 8) | ஏற்றுமதி நிகரம் என்பது<br>அ) ஏற்றுமதி X இறக்குமதி ஆ) ஏற்றுமதி + இறக்குமதி<br>இ) ஏற்றுமதி -- இறக்குமதி ஈ) பணிகள் ஏற்றுமதி | **இ) ஏற்றுமதி – இறக்குமதி** |
| 9) | கீழ்க்காணபவர்களில் யார் ஒற்றைக்காரணி வாணிகவீதத்தை வடிவமைத்தவர்<br>அ) ஜேக்கப் வைனர் ஆ) G.S.டோரன்ஸ்<br>இ) F.W.டாசிக் ஈ) ஜே.எஸ்.மில் | **அ) ஜேக்கப் வைனர்** |
| 10) | வாணிகவீதம் ...................... பற்றிக் குறிப்பிடுகின்றது.<br>அ) பொருள் ஏற்றமதி இறக்குமதி விகிதம்<br>ஆ) இறக்குமதி வழி விகிதம் ஈ) (அ) வும் (இ) யும்<br>இ) ஏற்றுமதி விலை இறக்குமதி விலை விகிதம் | **இ) ஏற்றுமதி விலை இறக்குமதி விலை விகிதம்** |
| 11) | சாதகமான வாணிகச் சூழலில் ஏற்றுமதி இறக்குமதியைவிட ......................... ஆக இருக்கும்.<br>அ) அதிகமாக ஆ) குறைவாக<br>இ) கிட்டத்தட்ட சமமாக ஈ) சமமாக | **அ) அதிகமாக** |
| 12) | இறக்குமதி ஏற்றுமதியைவிட அதிகமாக இருத்தலை கீழ்க்காணும் வழிகளில் எது சரிசெய்யும்?<br>அ) சுங்கத்தீர்வையைக் குறைத்தல்<br>ஆ) ஏற்றுமதி வரியை அதிகரித்தல்<br>இ) ஏற்றுமதிக்கு ஊக்கமளித்தல்<br>ஈ) இறக்குமதிக்கு ஊக்கமளித்தல் | **இ) ஏற்றுமதிக்கு ஊக்கமளித்தல்** |
| 13) | அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை உள்ளடக்கிய இனங்கள் அ) புலனாகும் பண்டங்கள் மட்டும்<br>ஆ) புலனாகாத பணிகள் மட்டும்<br>இ) அ மற்றும் ஆ ஈ) பண்ட வாணிகம் மட்டும் | **இ) அ மற்றும் ஆ** |
| 14) | அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலைக் கூறுகள் கீழ்க்காண்பனவற்றில் எவை?<br>அ) நடப்புக் கணக்கு ஆ) மையவங்கி இருப்பு<br>இ) மூலதனக் கணக்கு ஈ) அ, ஆ, இ -- மூன்றும் | **ஈ) அ, ஆ, இ -- மூன்றும** |
| 15) | வாணிகச் சமநிலை அறிக்கையில்<br>அ) பண்டப் பரிமாற்றம் மட்டும் பதிவாகிறது<br>ஆ) பண்டங்கள், பணிகள் பரிமாற்றங்கள் பதிவாகிறது<br>இ) மூலதனம் மற்றும் நிதிப் பரிமாற்றங்கள் பதிவாகிறது ஈ) மேற்கண்ட அனைத்தும் பதிவாகிறது | **அ) பண்டப் பரிமாற்றம் மட்டும் பதிவாகிறது** |
| 16) | சுற்றுலாவும் வெளிநாட்டுப் பயணமும் தொடர்புடைய பரிமாற்றங்கள் அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலையின் எந்தக் கணக்கின்கீழ் பதிவாகின்றன?<br>அ) பண்டங்கள் வாணிகக் கணக்கு<br>ஆ) பணிகள் வாணிகக் கணக்கு<br>இ) பரிமாற்றக் கணக்கு ஈ) மூலதனக் கணக்கு | **ஆ) பணிகள் வாணிகக் கணக்கு** |
| 17) | சுழற்சி அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை சமமற்ற நிலைக்கான காரணம் ஈ) அ மற்றும் ஆ<br>அ) வாணிகச் சுழற்சியின் மாறுபட்ட காலகட்டம்<br>ஆ) வருமானமும் விலைத்தேவைநெகிழ்ச்சியும் நாடுகளுக்கிடையே வேறுபடுதல்<br>இ) நீண்டகாலப் பொருளாதார மாற்றங்கள் | **ஈ) அ மற்றும் ஆ** |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| **18)** | கீழ்க்காண்பனவற்றில் எவை வெளிநாட்டு நேரடி மூலதனத்திற்கான எடுத்துக்காட்டாகக் கூறமுடியாது?<br>அ) வெளிநாட்டில் தன்னூர்தி ஆலை அமைத்தல்<br>ஆ) வெளிநாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற இரும்பு உருக்காலையை வாங்குதல்<br>இ) வெளிநாட்டுத் துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது<br>ஈ) முழு தனிஉரிமையுடன் ஒருபுதிய நிறுவனத்தை வெளிநாட்டில் தொடங்குவது | **இ) வெளிநாட்டுத் துணி நிறுவனம் வெளியிட்ட பங்கு அல்லது கடன் பத்திரத்தை வாங்குவது** |
| **19)** | இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை அ) வங்கி<br>ஆ) அணு ஆற்றல் இ) மருந்து உற்பத்தி ஈ) காப்பீடு | **ஆ) அணு ஆற்றல்** |
| **20)** | கோட்பாட்டு அடிப்படையில் வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகளாவன<br>அ) பொருளாதார வளர்ச்சி<br>ஆ) பன்னாட்டு வாணிக வளர்ச்சி<br>இ) வேலைவாய்ப்பும் திறன் அதிகரித்தலும்<br>ஈ) மேற்கண்ட அனைத்தும் | **ஈ) மேற்கண்ட அனைத்தும்** |

www.Padasalai.Net

<table>
<tr><th colspan="3">இரண்டு மதிப்பெண் வினா -- விடை</th></tr>
<tr><td>21)</td><td colspan="2">பன்னாட்டுப் பொருளியல் என்றால் என்ன?<br>* பண்டங்கள், பணிகள் நாடுகளுக்கிடையே பரிமாற்றம் செய்வது பற்றிய பொருளியலின் ஒரு பாடப்பிரிவாகும்.</td></tr>
<tr><td>22)</td><td colspan="2">பன்னாட்டு வாணிகம் -- வரைவிலக்கணம் தருக.<br>* பண்டங்கள், பணிகளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் பரிமாறிக் கொள்வது.<br>* வெளிவர்த்தகம் அல்லது மண்டலங்களுக்கிடையிலான வாணிகம் அல்லது அயல் வாணிகம் எனவும் அழைக்கலாம்.</td></tr>
<tr><td>23)</td><td colspan="2">பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.<br>1) திறனுடைய உற்பத்தி<br>* பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடும் அனைத்து நாடுகளும் முழு அல்லது ஒப்பீட்டுத் தனித் தேர்ச்சியை அடைகின்றன.<br>2) நாடுகளிடையே விலை சமனடைதல்<br>* அனைத்து வணிக நாடுகளிலும் சமநிலை நிலவ உதவுகிறது.<br>3) பற்றாக்குறையுள்ள வளங்களைச் சமமாகப் பகிர்தல்<br>* பற்றாக்குறையுள்ள வளங்களைச் சமமாகப் பகிர்ந்துகொள்ள உதவுகிறது.<br>4) பன்னாட்டு வாணிகத்தின் பொதுவான நன்மைகள்<br>* பலவகையான பண்டங்கள் கிடைக்க வழிவகுக்கிறது.<br>* போக்குவரத்து வசதிகள் வளருகிறது.</td></tr>
<tr><td rowspan="4">24)</td><td colspan="2">பன்னாட்டு வாணிகத்தின் அடிப்படைகளை விளக்குவதில் ஆடம் ஸ்மித்துக்கும் டேவிட் ரிகார்டோவுக்கும் உள்ள வேறுபாடு என்ன?</td></tr>
<tr><th>ஆடம் ஸ்மித்</th><th>டேவிட் ரிகார்டோ</th></tr>
<tr><td>முழுச் செலவுக் கோட்பாடு</td><td>ஒப்புமைச் செலவுக் கோட்பாடு</td></tr>
<tr><td>குறைந்த தனி அடக்கச் செலவில் பொருள் உற்பத்தி செய்யும் தேர்ச்சியை நாடுகள் பெற்றிருப்பது</td><td>இருபொருள்களை உற்பத்தி செய்து அதனை மற்ற நாட்டு உற்பத்திச்செலவுடன் ஒப்பிட்டுப் பொருள் உற்பத்தி செய்யும் தேர்ச்சியை நாடுகள் பெற்றிருப்பது</td></tr>
<tr><td>25)</td><td colspan="2">வணிக வீதத்தினை விளக்குக.<br>* ஏற்றுமதிப் பண்டத்தின் விலைக்கும் இறக்குமதிப் பண்டத்தின் விலைக்கும் இடையிலான விகிதம்.<br>$$\text{வணிக வீதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைக்குறியீடு}}{\text{இறக்குமதி விலைக்குறியீடு}} \times 100$$</td></tr>
<tr><td>26)</td><td colspan="2">வணிகச் செலுத்துநிலை பற்றி நீவிர் அறிவது யாது?<br>* நாடுகளுக்கிடையே பண்டங்கள் மட்டுமல்லாமல் பணிகள், பணம், மூலதனம் ஆகியவற்றையும் பரிமாறிக்கொள்ளப்படுவது.<br>* ஒருநாடு குறிப்பிட்ட காலத்தில் உலகநாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதாரப் பரிவர்த்தனை அறிக்கை.</td></tr>
<tr><td>27)</td><td colspan="2">செலாவணி மாற்றுவீதம் என்றால் என்ன?<br>* ஓர் அலகு அயல்பணத்தைப் பெறுவதற்கு எத்தனை அலகு உள்நாட்டுப் பணத்தைக் கொடுக்கிறோம் என்பது.<br>* ஓர் அமெரிக்க டாலரைப் பெற, அதற்கு நிகரான இந்தியப் பணத்தைக் கொடுப்பது.</td></tr>
</table>

www.Padasalai.Net

**மூன்று மதிப்பெண் வினா -- விடை**

**28** **பன்னாட்டுப் பொருளியலின் உள்ளடக்கத்தைப் பட்டியலிடுக.**

1) **தூய வணிகக் கோட்பாடு --** ஏற்றுமதி இறக்குமதிக்கான காரணங்கள், அயல் வாணிக விகிதம், பணமாற்று விகிதம், வாணிகச் செலுத்துநிலை , அயல்நாட்டுச் செலுத்துநிலை ஆகியவற்றை விவரிக்கிறது.

2) **கொள்கைச் சச்சரவுகள் --** அயல் வாணிகத்தின்மீது வரிவிதித்தல், மான்யம் வழங்குதல், பன்னாட்டு விலைபேதம், செலாவணிக் கட்டுப்பாடு, அயல்நாட்டு நேரடி முதலீடு ஆகியவற்றை விவரிக்கிறது.

3) **பன்னாட்டு வாணிகக் கூட்டமைப்பும் ஒன்றியங்களும்**
பன்னாட்டுக் கூட்டமைப்பு, சுங்கவரி ஒன்றியங்கள், பணவியல் ஒன்றியங்கள் பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றை விவரிக்கிறது.

4) **பன்னாட்டு நிதியும் வணிக ஒழுங்குபடுத்தும் நிறுவனங்களும்**
பன்னாட்டுப் பணநிதியம், உலக வங்கி, உலக வாணிக நிறுவனம், ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டு அமைப்பு ஆகியவற்றை விவரிக்கிறது.

**29** **பன்னாட்டு வாணிகத் தொன்மைக் கோட்பாட்டிற்கும் புதிய கோட்பாட்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை எழுதுக.**

| வ. எண் | தொன்மைப் பன்னாட்டு வாணிகக் கோட்பாடு | புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாடு |
|---|---|---|
| 1) | பன்னாட்டு வணிகத்தை விளக்குவதற்கு உழைப்பு சார்ந்த மதிப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது | பன்னாட்டு வணிகத்தை விளக்குவதற்கு பொது மதிப்புக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது |
| 2) | இது ஒரு காரணி ( உழைப்பு ) மாதிரியாகும் | இது இரு காரணி ( உழைப்பு, மூலதனம் ) மாதிரியாகும் |
| 3) | ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உழைப்பாளர்களின் உற்பத்தித் திறன் வேறுபாடே காரணம் என்கிறது | ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உற்பத்திக்காரணிகளின் கிடைப்பளவு வேறுபாடே காரணம் என்கிறது |

**30** **மொத்த , நிகரப் பண்டப் பரிமாற்று வாணிகவீதத்தைச் சுருக்கமாக எழுதுக.**

| வ. எண் | நிகரப் பண்டமாற்று வாணிகவீதம் | மொத்தப் பண்டமாற்று வாணிகவீதம் |
|---|---|---|
| 1) | F.W.டாசிக் 1927-இல் வடிவமைத்தார் | F.W.டாசிக் 1927-இல் வடிவமைத்தார் |
| 2) | ஏற்றுமதிப் பண்டங்களின் விலைக் குறியீட்டெண்ணிற்கும் இறக்குமதிப் பண்டங்களின் விலைக் குறியீட்டெண்ணிற்கும் இடையிலான விகிதத்தை 100 ஆல் பெருக்கக் கிடைக்கும் தொகை | மொத்த ஏற்றுமதிப் பண்டங்களின் குறியீட்டெண்ணிற்கும் மொத்த இறக்குமதிப் பண்டங்களின் குறியீட்டெண்ணிற்கும் இடையிலான விகிதத்தை 100 ஆல் பெருக்கக் கிடைக்கும் தொகை |
| 3) | $T_n = ( P_x / P_m ) \times 100$ | $T_g = ( Q_x / Q_m ) \times 100$ |

www.Padasalai.Net

**31)** **வாணிகக் கொடுப்பல்நிலைக்கும் அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலைக்கும் இடையிலான ஏதேனும் மூன்று வேறுபாடுகளைப் பட்டியலிடுக.**

| வ. எண் | வாணிகக் கொடுப்பல்நிலை | அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலை |
|---|---|---|
| 1) | நாடுகளுக்கிடையே பண்டங்கள் மட்டுமே பரிமாறிக் கொள்ளப்படுகிறது | நாடுகளுக்கிடையே பண்டங்கள், பணிகள், பணம், மூலதனம் பரிமாறிக் கொள்ளப்படுகிறது |
| 2) | புலப்படும் வாணிகம் | பண்டங்கள் மற்றும் பணிகள் வாணிகம் |
| 3) | ஒரு நாட்டின் குறிப்பிட்ட ஆண்டில் பண்டங்களின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிப் பரிவர்த்தனை அறிக்கை | ஒரு நாடு குறிப்பிட்ட காலத்தில் உலகநாடுகளுடன் மேற்கொள்ளும் பொருளாதாரப் பரிவர்த்தனை அறிக்கை. |

**32)** **இறக்குமதிக் கட்டுப்பாடு என்றால் என்ன?**

* இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளில் ஒன்று.
* இறக்குமதிக் கட்டுப்பாடு என்பது இறக்குமதி அளவை நிர்ணயித்தலாகும்.
* இறக்குமதிமீதான வரிவிதித்தலை அதிகப்படுத்தலாம்.
* இறக்குமதி அளவை நிர்ணயித்து இறக்குமதியைக் குறைக்கலாம்.
* கட்டுப்பாடு என்ற முறையில் அத்தியாவசியமற்ற பண்டங்களைக் குறைப்பது.

**33)** **மாறுகின்ற பணமாற்றுவீதத்தின் பொருள் தருக.**

* பரிமாற்றுவீத நிர்ணய முறைகளில் ஒன்று.
* அயல்நாட்டுச் செலாவணிக்கான தேவையும் அளிப்பும் பரிமாற்றுவீதத்தை நிர்ணயிக்கும் முறை.
* நிலையற்ற அல்லது மிதக்கும் பரிமாற்றுவீதம் என்றும் அழைக்கலாம்.

**34)** **வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.**

1. விற்பனையை விரிவுபடுத்துதல்
2. இயற்கை வளங்களைக் கையகப்படுத்துதல்
3. வாணிகப் பரவலாக்கம்
4. போட்டி இடர்களைக் குறைத்தல்

www.Padasalai.Net

<table>
<tr><td colspan="4">ஐந்து மதிப்பெண் வினா -- விடை</td></tr>
<tr><td rowspan="9">35</td><td colspan="3">உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும்.</td></tr>
<tr><td>வ.எண்</td><td>உள்நாட்டு வாணிகம்</td><td>பன்னாட்டு வாணிகம்</td></tr>
<tr><td>1)</td><td>ஒரு நாட்டிற்குள் மக்களுக்கும் நிறுவனங்களுக்குமிடையே நடைபெறும் வாணிகம்</td><td>பல நாட்டின் மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையிலான வாணிகம்</td></tr>
<tr><td>2)</td><td>உழைப்பும் மூலதனமும் ஒருநாட்டின் பகுதிகளுக்கிடையே தடையில்லாமல் இடம் பெயர்தல்</td><td>உழைப்பும் மூலதனமும் நாடுகளுக்கிடையே தடைகளுடன் இடம் பெயர்தல்</td></tr>
<tr><td>3)</td><td>பண்டங்கள், பணிகள் இடம் பெயர்தலில் தடை ஏதுமில்லை</td><td>பண்டங்கள், பணிகள் இடம் பெயர்தலைச் சுங்கவரி, பங்களவு முதலான தடைகள் கடினமாக்குகின்றன</td></tr>
<tr><td>4)</td><td>விற்றல் வாங்கலில் ஒரேயொரு பணம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது</td><td>விற்றல் வாங்கலில் பலநாட்டுப் பணங்கள் பயன்படுத்தப்படுகின்றன</td></tr>
<tr><td>5)</td><td>புவியமைப்பும் காலநிலைச்சூழலும் கிட்டத்தட்ட ஒரேமாதிரி இருக்கும்</td><td>புவியமைப்பும் காலநிலைச்சூழலும் வேறுபடும் இயல்பு கொண்டவை</td></tr>
<tr><td>6)</td><td>வாணிகமும், நிதி நடைமுறைகளும் ஒரே மாதிரியானவை</td><td>வாணிகமும், நிதி நடைமுறைகளும் வேறுபடும் போக்குக் கொண்டவை</td></tr>
<tr><td>7)</td><td>அரசமைப்புமுறை, மக்களின் பழக்க வழக்கங்கள், அரசின் கொள்கைக ஆகியவற்றில் வேறுபாடில்லை</td><td>அரசமைப்புமுறை, மக்களின் பழக்க வழக்கங்கள், அரசின் கொள்கைக ஆகியவற்றில் வேறுபாடுகளிருக்கும்</td></tr>
<tr><td colspan="3">( ஏதேனும் ஐந்து மட்டும் )</td></tr>
</table>

www.Padasalai.Net

36)

**ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை விவரி.**

**ஒப்புமைச் செலவுக் கோட்பாடு**

* டேவிட் ரிகார்டோ 1817 இல் வெளியிட்ட " அரசியல் பொருளாதாரமும் வரிவிதித்தலின் கோட்பாடுகளும்" என்ற நூலில் ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டை விளக்கி எழுதியுள்ளார்.
* பண்டங்களை உற்பத்திச்செய்ய செலவழிக்கப்படும் செலவு வேறுபாடே பன்னாட்டு வாணிபத்திற்கான அடிப்படை என்கிறார் டேவிட் ரிகார்டோ.
* ஒருநாடு உற்பத்திச் செய்யும் பண்டங்களுக்கிடையே தனியடக்கச் செலவில் வேறுபாடில்லை என்றாலும் ஒப்புமைச்செலவில் வேறுபாடு இருக்கும்.
* குறைந்த ஒப்புமைச் செலவில் உற்பத்தி செய்யும் நாடு பன்னாட்டு வாணிகத்தால் பயனடைய முடியும்.

**எடுகோள்கள்**

1) இரண்டு நாடுகள் இரண்டு பொருள்களை உற்பத்தி செய்கின்றன.
2) கூலிச்செலவு மட்டுமே உற்பத்திச் செலவாகும்.
3) உழைப்பாளர்கள் அனைவரும் சமமான திறன் பெற்றவர்கள்
4) உற்பத்தியளவு மாறா விளைவு விதிக்குட்பட்டது.
5) பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடுவதில்லை.

**எடுத்துக்காட்டு விளக்கம்**

| நாடு | துணி | கோதுமை | உள்நாட்டுப் பரிமாற்ற விகிதம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 100 | 120 | 1 மூட்டை கோதுமை = 1.2 மீ துணி |
| இந்தியா | 90 | 80 | 1 மூட்டை கோதுமை = 0.88 மீ துணி |

* இந்தியாவும் அமெரிக்காவும் இருபண்ட உற்பத்தியில் சிறந்து விளங்குகிறது.
* இவ்விரு நாடுகளும் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபடாமல் இருந்தால் ஒருமூட்டைக் கோதுமையையும் ஒருமீட்டர் துணியையும் உற்பத்தி செய்ய அமெரிக்கா 220அலகு உழைப்பையும், இந்தியா 170அலகு உழைப்பையும் பயன்படுத்தவேண்டும்.
* மாறாக இவ்விரு நாடுகளும் பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட்டால் அமெரிக்கா 200அலகு உழைப்பைப் பயன்படுத்தி இரண்டு மீட்டர் துணியை உற்பத்தி செய்து அதில் ஒருமீட்டர் துணியைக் கொடுத்து ஒருமூட்டைக் கோதுமையை இந்தியாவிடம் பரிமாறிக்கொள்ளலாம்.
* இந்தியா 160அலகு உழைப்பை பயன்படுத்தி இரண்டு மூட்டை கோதுமையை உற்பத்தி செய்து இதில் ஒருமூட்டை கோதுமையைக் கொடுத்து ஒருமீட்டர் துணியை அமெரிக்காவிடம் பரிமாறிக்கொள்ளலாம்.
* இதனால் அமெரிக்காவுக்கு 20அலகு உழைப்பும், இந்தியாவிற்கு 10அலகு உழைப்பும் மிச்சமாகிறது. இது பன்னாட்டு வாணிப நன்மையாகும்.

**திறனாய்வு**

1) உழைப்புச்செலவு உற்பத்திச்செலவில் ஒருபகுதிதான். உழைப்புச்செலவு அடிப்படையில் விவரிக்கப்பட்ட கோட்பாடு உண்மையை பிரதிபலிக்கவில்லை.
2) பல்வேறு நாட்டு உழைப்பாளர்கள் ஒரேயளவு திறன் பெற்றவர்கள் அல்லர்.

www.Padasalai.Net

**37)**

**புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாட்டினை விவாதிக்கவும்.**

**புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாடு**

* சுவீடன் நாட்டு இலி ஹெக்சர் 1919இல் பன்னாட்டு வாணிகக் கோட்பாட்டை விளக்கி, பெர்டில் ஓலின் விரிவுபடுத்தினார்
* நாடுகளுக்கிடையே நிலவும் உற்பத்திவள அளிப்பு வேறுபாடே பன்னாட்டு வாணிகத்திற்கான அடிப்படை என்கிறது புதிய கோட்பாடு.

**கோட்பாடு**

1) நாடுகள் பெற்றுள்ளஉற்பத்திக்காரணிகள் அளவு வேறுபடுகிறது.
2) உற்பத்திக்குத் தேவையான உற்பத்திக்காரணிகளின் விகிதம் வேறுபடுகிறது இரண்டு காரணங்களால் ஒப்புமைச் செலவு வேறுபடுகிறது.

**எடுகோள்கள்**

1) இரண்டு நாடுகள் இரண்டு உற்பத்திக்காரணிகளைப் பயன்படுத்தி இரண்டு பண்டங்களை உற்பத்தி செய்கின்றன.
2) நாடுகள் வெவ்வேறு அளவுகளில் உற்பத்திக்காரணிகளைப் பெற்றுள்ளது.
3) ஒரேவிதமான உற்பத்தித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன.
4) ஒரே இயல்பான தேவையைப் பெற்று, நிறைவுப்போட்டி நிலவுகிறது.

**விளக்கம்**

* மூலதனம் மிகுதியாக உள்ள நாடு அதிக முதலீட்டில் உற்பத்தியாகும் பண்டங்களை ஏற்றுமதி செய்யும்.
* உழைப்பாளர்கள் மிகுதியாக உள்ள நாடு அதிக உழைப்பினால் உற்பத்தியாகும் பண்டங்களை ஏற்றுமதி செய்யும்.

| விவரங்கள் | இந்தியா | அமெரிக்கா |
|---|---|---|
| உழைப்பின் அளிப்பு | 50 | 24 |
| மூலதனத்தின் அளிப்பு | 40 | 30 |
| மூலதன --- உழைப்பு விகிதம் | 40/50 = 0.8 | 30/24 = 1.25 |

* ஒருநாட்டின் மூலதன அளவிற்கும், மற்ற உற்பத்திக்காரணிகளின் அளவிற்குமான மற்ற நாடுகளின் விகிதத்தைவிட அதிகமாக இருந்தால் அந்த நாட்டை மூலதனம் மிகுந்த நாடு எனக் கருதலாம்.
* இந்தியா அதிக மூலதனம் உள்ள நாடு (மூலதன -- உழைப்பு விகிதம் 0.8 ) போன்று தோன்றினாலும் அமெரிக்காவே அதிக மூலதனம் (மூலதன -- உழைப்பு விகிதம் 1.25 ) உள்ள நாடாகும்.

**குறைபாடுகள்**

**1)** உற்பத்திக்காரணிகளின் இருப்பளவு காலத்திற்கு ஏற்றாற்போல் மாறலாம்.
**2)** உற்பத்திக்காரணிகளின் திறன் நாடுகளிடையே வேறுபடலாம்.

www.Padasalai.Net

| | |
|---|---|
| 38) | **ஜேக்கப் வைனரால் வடிவமைக்கப்பட்ட வாணிகவீத வகைகளை விவரி.**<br><br>* ஜேக்கப் வைனர் உற்பத்திக்காரணிகள் பரிமாற்றத்தின் அடிப்படையில் வாணிகவீதங்களை இருவகையாக வகைப்படுத்துகிறார்.<br>1) ஒற்றைக்காரணி வாணிகவீதம்<br>2) இரட்டைக்காரணி வாணிகவீதம்<br><br>**1) ஒற்றைக்காரணி வாணிகவீதம்**<br>* ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்ணிற்கும் இறக்குமதி விலைக் குறியீட்டு எண்ணிற்கும் இடையேயான விகிதத்தை ஏற்றுமதிக்கான உற்பத்தித் தொழில்துறையின் உற்பத்தித்திறன் குறியீட்டெண்ணின் மதிப்பால் மாற்றம் செய்யப்பட்ட வீதமே ஒற்றைக்காரணி வாணிகவீதம்.<br>$T_f = (P_x / P_m) X F_x$<br>**$T_f$** --- ஒற்றைக்காரணி வாணிகவீதம்<br>**$P_x$** --- ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்<br>**$P_m$** --- இறக்குமதி விலைக் குறியீட்டெண்<br>**$F_x$** --- ஏற்றுமதிக்குப் பொருள் உற்பத்தி செய்யும் தொழில்துறையின் உற்பத்தித்திறன் குறியீட்டெண்<br>**2) இரட்டைக்காரணி வாணிகவீதம்**<br>* ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்ணிற்கும் இறக்குமதி விலைக் குறியீட்டு எண்ணிற்கும் இடையேயான விகிதத்தை ஏற்றுமதிக்கான உற்பத்தித் தொழில் துறையின் உற்பத்தித்திறன் குறியீட்டெண் மற்றும் இறக்குமதிக்கான உற்பத்தித் தொழில் துறையின் உற்பத்தித்திறன் குறியீட்டெண்ணின் மதிப்பால் மாற்றம் செய்யப்பட்ட வீதமே இரட்டைக்காரணி வாணிகவீதம்.<br>$T_{ff} = (P_x / P_m) X (F_x / F_m)$<br>**$T_{ff}$** --- இரட்டைக்காரணி வாணிகவீதம்<br>**$P_x$** --- ஏற்றுமதி விலைக் குறியீட்டெண்<br>**$P_m$** --- இறக்குமதி விலைக் குறியீட்டெண்<br>**$F_x$** --- ஏற்றுமதிக்குப் பொருள் உற்பத்தி செய்யும் தொழில்துறையின் உற்பத்தித்திறன் குறியீட்டெண்<br>**$F_m$** --- இறக்குமதிக்குப் பொருள் உற்பத்தி செய்யும் தொழில்துறையின் உற்பத்தித்திறன் குறியீட்டெண் |

www.Padasalai.Net

39)

**அயல்நாட்டுச் செலுத்துநிலையின் கூறுகளை அட்டவணை வடிவில் விளக்குக.**

* வரவு மற்றும் பற்று இனங்கள் நேர்க்கிடையாக அயல்நாட்டு செலுத்துநிலை அறிக்கையில் பதியப்பட்டு மூன்று இனங்களாக வகைப்படுத்தப்படுகிறது.

| **நடப்புக் கணக்கு** | **மூலதனக் கணக்கு** | **மையவங்கி நிதிச்சொத்துக் கையிருப்புக் கணக்கு** |
|---|---|---|
| பன்னாட்டு பண்ட பரிமாற்றங்கள், பன்னாட்டுப் பணி பரிமாற்றங்கள், பன்னாட்டு ஒருதரப்புச் செலுத்துகைகள் இந்தக் கணக்கின்கீழ் பதியப்படுகிறது. | வெளிநாட்டுக் கடன், அயல்நாட்டு முதலீடு, பன்னாட்டு பண அங்காடி, பன்னாட்டு நிதி அங்காடி, விற்றல் வாங்கல் பரிமாற்றங்கள் இந்தக் கணக்கின்கீழ் பதியப்படுகிறது. | மையவங்கியின் கையிருப்பில் உள்ள செலாவணிச் சொத்துகளில் நடைபெறும் பரிமாற்றங்கள் இந்தக் கணக்கின்கீழ் பதியப்படுகிறது.<br><br>( தங்கத்தின் இருப்பு, வெளிநாட்டுப் பணம், சிறப்பு எடுப்புரிமை, பன்னாட்டுப்பணநிதியத்தின் நிகரக் கடன்பெறும் தகுதி நிலை ஆகியவை பதிவு செய்யப்படுகிறது ) |
| உபரி எழும் | உபரி எழும் | நடப்பு மற்றும் மூலதனக்கணக்கில் உபரி எழுந்தால் கையிருப்புக்கணக்கில் சேர்க்கப்படும் |
| பற்றாக்குறை விழும் | பற்றாக்குறை விழும் | நடப்பு மற்றும் மூலதனக்கணக்கில் பற்றாக்குறை விழுந்தால் கையிருப்பிலிருந்து எடுத்துச் செலவிடப்படும். எனவே **மைய வங்கித் தீர்வுக் கணக்கு** என்ற பெயர் வழங்கப்பட்டது. |

www.Padasalai.Net

40)

**அயல்நாட்டுச் செலுத்துநிலைச் சமமின்மையின் வகைகளை விவரி.**
**அயல்நாட்டுச் செலுத்துநிலைச் சமமின்மையின் வகைகள்**

* அயல்நாட்டுச் செலுத்துநிலை சமனற்ற நிலையினை மூன்று வகையாக வகைப்படுத்தப்படுகிறது.
* 1) சுழற்சி சமனற்ற நிலை
  2) நீண்டகாலச் சமனற்ற நிலை
  3) கட்டமைப்புச் சமனற்ற நிலை

**1) சுழற்சி சமனற்ற நிலை**

* வாணிகச் சுழற்சியின் விளைவாக எழும் அயல்நாட்டுச் செலுத்துச் சமனற்ற நிலையைச் சுழற்சி சமனற்ற நிலை என்கிறோம்.
* இரண்டு காரணங்களால் நிகழ்கிறது.
  **1)** நாடுகள் வாணிகச் சுழற்சியின் வெவ்வேறு கட்டங்களில் இருப்பது
  **2)** நாடுகளுக்கிடையே தேவை நெகிழ்வு அளவு மாறுபடுவது

**2) நீண்டகாலச் சமனற்ற நிலை**

* நாடுகள் பொருளாதார வளர்ச்சிப் படிநிலைகளில் முன்னேறும்பொழுது நீண்டகாலத் தலைகீழ் மாற்றங்கள் நிகழ்வதால் உண்டாகும் அயல்நாட்டுச் செலுத்துச் சமனற்ற நிலையை நீண்டகாலச் சமனற்ற நிலை என்கிறோம்.
* வளர்ச்சியின் துவக்கநிலையில் ஒருநாட்டின் உள்நாட்டு முதலீடு உள்நாட்டுச் சேமிப்பைவிடக் கூடுதலாக இருக்கும்.
* இறக்குமதி ஏற்றுமதியைவிட அதிகமாக இருக்கும்.
* இந்தியாவில் 1951-இலிருந்தே இந்தச் சூழ்நிலை நிலவுகிறது.

**3) கட்டமைப்புச் சமனற்ற நிலை**

* நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றங்களினால் நிகழும் அயல்நாட்டுச் செலுத்துச் சமனற்ற நிலையை கட்டமைப்புச் சமனற்ற நிலை என்கிறோம்.
* மாற்று வழங்கல் ஆதாரங்களைக் கண்டுபிடித்தல், செயற்கையான பதிலீட்டுப் பண்டங்களைக் கண்டுபிடித்தல், உற்பத்தி வளங்கள் தீர்ந்து போதல் அல்லது போக்குவரத்து வழிகளும் செலவுகளும் மாற்றமடைதல் போன்றவையே பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம் என்கிறோம்.

www.Padasalai.Net

**41)**

**பணமாற்று வீதம் எவ்வாறு இரண்டுமுறைகளில் நிர்ணயமாகிறது என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**பணமாற்று வீதம்**

* பணமாற்று வீதத்தை அயல்நாட்டுச் செலாவணி மாற்றுவீதம் என்றும் அழைக்கலாம்.

**அயல்நாட்டுச் செலாவணி இலக்கணம்**

* ஒருநாட்டின் பணத்தை மற்ற நாட்டுப் பணமாக மாற்றுவது மற்றும் ஒருநாட்டிலிருந்து பிற நாட்டிற்குப் பணத்தை அனுப்பும் முறையே ஆகும்.
* பரிமாற்றுவீதம் இரண்டு முறைகளில் நிர்ணயமாகிறது.
  1) நிலையான பரிமாற்றுவீதம்
  2) நிலையற்ற ( மாறுபடும் ) பரிமாற்றுவீதம்

**1) நிலையான பரிமாற்றுவீதம்**

* ஒருநாட்டின் அரசாங்கம் மைய வங்கியின்மூலம் பரிமாற்று வீதத்தை நிர்ணயித்தால் அதை நிலையான பரிமாற்றுவீதம் என்கிறோம்.
* தங்கமாற்றுப் பன்னாட்டுப் பணவியல் முறையில் (**Gold Standard** ) நாடுகளின் பரிமாற்று மதிப்பு தங்கத்தின் அளவில் நிர்ணயிக்கப்பட்டது.
* மாறாத பரிமாற்றுவீதம் என்றும், நிலைநிறுத்தப்பட்ட பரிமாற்றுவீதம் என்றும் அழைக்கப்படுகிறது.

**2) நிலையற்ற ( மாறுபடும் ) பரிமாற்றுவீதம்**

* அந்நியச் செலாவணிச் சந்தை விசைகளான மாறுகின்ற அயல்நாட்டுச் செலாவணிக்கான தேவையும் அளிப்பும் பரிமாற்றுவீதத்தை நிர்ணயிக்கும் முறையே மாறுகின்ற பரிமாற்றுவீதமாகும்.
* மிதக்கும் பரிமாற்றுவீதம் என்றும் அழைக்கலாம்.

www.Padasalai.Net

**42)**

**வெளிநாட்டு நேரடி முதலீட்டினால் ஏற்படும் நன்மைகளைக் குறிப்பிடுக.**

**வெளிநாட்டு நேரடி முதலீடு**

* வேறுநாட்டில் முதலீடு செய்து நிறுவனத்தின் மேலாண்மையை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வதையே வெளிநாட்டு நேரடி முதலீடு என்கிறோம்.

**வெளிநாட்டு நேரடி முதலீட்டினால் ஏற்படும் நன்மைகள்**

1) வெளிநாட்டு நேரடி மூலதனம், அது சென்றடையும் நாட்டின் மூலதன அளவை உயர்த்தி வேலைவாய்ப்பு, வருமான அளவையும் அதிகரிக்கும்.
2) வெளிநாட்டு நேரடி மூலதனம் சென்றடையும் நாட்டிற்குப் புதிய தொழில்நுட்பத்தைக் கொண்டுவருகிறது.
3) வெளிநாட்டு நேரடி முதலீடு நுழையும் நாட்டின் அரசுக்கு நிறுவன இலாபவரி செலுத்துவதன்மூலம் வருவாயைக் கொண்டுவருகிறது.
4) இலாபத்தின் ஒருபகுதியை மறுமுதலீடு செய்வதன்மூலம் தொழில்வளம் பெருகும்.
5) புதிய தொழில் மேலாண்மை முறைகளை அறிமுகப்படுத்தும்.
6) ஏற்றுமதியை அதிகப்படுத்தி இறக்குமதிக்கான அவசியத்தைக் குறைத்து அயல்நாட்டுச் செலுத்துச் சமநிலைச் சமமின்மையை நீக்கும்.
7) போட்டியை உருவாக்கி உள்நாட்டு முற்றுரிமையைத் தகர்க்கும்.
8) வெளிநாட்டு நேரடி மூலதனம் முதலீட்டையும் அயல்நாட்டுச் செலாவணியையும் கொண்டுவருவதன்மூலம் சேமிப்பு, முதலீடு இடைவெளியையும் நிரப்ப உதவுகிறது.
9) உள்நாட்டுத் துணைத்தொழில் நிறுவனங்கள் வளரவும், வெளிநாட்டு நிறுவனங்களோடு இணைந்து உள்நாட்டுச் சிறுதொழில்கள் வளர உதவும்.
10) உள்நாட்டுத் தொழில்முனைவோர்களை வெளிநாட்டு மூலதனம் மற்ற நாடுகளில் முதலீடு செய்யத் தூண்டுகிறது.

**( ஏதேனும் ஐந்து மட்டும் )**

www.Padasalai.Net